# உதவி அமர்வு நீதிமன்றம், கோவில்பட்டி.

# எஸ்சி எண் 332/2022

| | | |
|---|---|---|
| பெயர் | .. | கரண்(அசா3) |
| த/பெ. க/பெ | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| வயது | .. | |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2024 ஆண்டு ஜுலை மாதம் 10 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் மேரி ஜுலியட் அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

10.07.2024

2ம் எதிரி ஆஜர். 1,3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஆலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டிராவல்ஸ் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

**<u>பிறழ்சாட்சி</u>:**

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதியதால் அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலீஸ் என்னை விசாரித்ததாகவும், போலீஸ் விசாரணையில் இந்த வழக்கில் சந்துருவை எதிரிகள் பல முறை எச்சரித்ததாக என்னிடம் கூறியதாகவும் , காவல் துறையில் எந்த வித புகாரும் கொடுக்கவில்லை என பதில் கூறியதாகவும், 22.9.2021 தேதி மாலை 6.00 மணியளவில் நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த மணி மகன்

கபிஸ், நான் உட்பட ஆகியோர் ஆலம்பட்டியில் உள்ள சுதேசனா மேட்ச் பக்டரி அருகில் நின்று பேசிக்கொண்டு இருந்ததாகவும், அந்த சமயம் புகார் தாரர் சந்துரு அந்த வழியாக வந்ததாகவும், அப்போது மதன் ராஜ் கிரிகாந்த் மற்றும் அவருடன் வந்த பின்னர் விசாரித்து தெரிந்து கொண்ட பாலசுப்பிரமணியன் மகன் நாகேந்திரன் ஆகியோர் புகார் தாரர் சந்துருவை வழி மறைத்து வாக்குவாதம் செய்துவிட்டு சென்றதாகவும், அதைப் பார்த்த நாங்கள் சந்துருவிடம் என்ன பிரச்சனை என கேட்டபோது மேற்படி மூவரும் சந்துருவை கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவும், வெட்டி கொன்றுவிடுவதாக மிரட்டிதாக கூறினார் என்றும், அதற்கு நம்ம ஊர் உள்ளேயே வந்து மிரட்டிவிட்டு போகிறார்களா நாம் போய் கேட்போம் என மாலை 6.10 மணியளவில் நானும் சந்துருவும் கபிஸ் கரன் ஆகிய 4 வரும் சென்றோம் எனவும், அப்போது மதன்ராஜம் கிரிகாந்தும் நாகேந்திரனும் ரமேஷ் வீட்டு முன்பு நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது சந்துரு அவர்களிடம் போய் எனக்கும் உங்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை , எதற்காக அவ்வாறு பேசினீர்கள் என கேட்டதாகவும் , அதற்கு கிரிகாந்த் சந்துருவை பார்த்து எவ்வளவு தைரியம் இருந்தால் எங்களிடமே வந்து எதிர்த்து கேட்பாய் என கூறி அருகில் கிடந்த மூங்கில் கம்பை எடுத்து கெட்ட வார்த்தைகளால் திட்டி சந்துருவின் தலையில் அடிக்க வந்ததாகவும், சந்துரு விலகிக்கொண்டதாகவும் அதனால் அந்த அடி தலையில் பட்டது எனவும், சந்துரு விலகாவிட்டால் அந்த அடி சந்துரு தலையில் பட்டு அந்த இடத்திலேயே இறந்திருப்பார் எனவும் மேலும் மதன்ராஜ் கையால் சந்துரு கன்னத்தில் மாறி மாறி அடித்ததாகவும் சந்துரு வலி தாங்க முடியாமல் சத்தம் போடவும், அதை பார்த்த நானும் கபிஸ், ரமேஷ் ஆகியோர் அங்கு வந்தவுடன் மேற்படி மூவரும் சந்துருவை பார்த்து இன்று தப்பித்துவிட்டாய் என்று இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டிவிட்டு அங்கு இருந்து சென்றுவிட்டதாகவும் , அதன்பின் சந்துரு தன்னை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க போவதாக கூறிவிட்டு சென்றதாக போலீஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**: இல்லை

(ஒம்) D.மாரிக்காளை.,B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.